நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, திருச்சிராப்பள்ளி.
முன்னிலை :– திரு.K.R.பாலாஜி, B.A.B.L(Hons),
நீதித்துறை நடுவர் எண்.3, திருச்சிராப்பள்ளி.
2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை
சுருக்கு முறை விசாரணை வழக்கு எண்.277/2023
(CNR.No.TNTP03-034107 -2022)
.....

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
ஜீயபுரம் காவல் நிலையம்,
குற்ற எண்.152/2022 ..... குற்றமுறையிடுபவர்

/இடையே/

அஜித் குமார் (வயது 28/24),
த/பெ.ராஜேந்திரன்,
4 வது வார்ட், அந்தநல்லூர்,
திருச்சி மாவட்டம். ..... எதிரி

**வழக்கு சுருக்கம்**

| வ. எண். | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | வழக்கு எண். | சுருக்கு முறை வழக்கு எண்.277/2023 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | ஜீயபுரம் காவல் நிலையம்<br>குற்ற எண்.152/2022 |
| 3 | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி | அஜித் குமார் (வயது 28/24),<br>த/பெ.ராஜேந்திரன்,<br>4 வது வார்ட், அந்தநல்லூர்,<br>திருச்சி மாவட்டம். |
| 4 | சம்பவம் நடைபெற்ற நாள் | 30.05.2022 |
| 5 | புகார் அளித்த நாள் | 31.05.2022 |
| 6. | கைது செய்த நாள் | 10.06.2022 (Anticipatory Bail) |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 10.06.2022 (Anticipatory Bail) |
| 8. | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பிய தேதி | --- |

| | | |
|---|---|---|
| **9.** | விசாரணை தொடங்கிய தேதி | 26.03.2024 |
| **10.** | விசாரணை முடிவுற்ற தேதி | 27.03.2024 |
| **11.** | தீர்ப்பு அல்லது உத்தரவு | எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b) மற்றும் 323 ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப் படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1) ன் கீழ் அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| **12.** | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம். |
| **13.** | காலதாமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 30.11.2022 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 30.11.2022 அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப் பட்டது. இந்த வழக்கின் தீர்ப்புரை 10.04.2024 அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. இந்நீதிமன்றத்தில் காலதாமதம் எதுவும் இல்லை |

இவ்வழக்கு கடந்த 30.11.2022 அன்று இந்நீதிமன்றத்தில் சுருக்க முறை விசாரணை வழக்கு எண்.277/2023 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 10.04.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சரவணகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –

கடந்த மே 30, 2022 ம் தேதி புகார்தாரர் ஊரில் பாலாயி அம்மன் கோவில் திருவிழா நடைபெற்று வந்ததால் ஊர் மக்களுடன் சேர்ந்து திருவிழாவில் அந்தநல்லூர் பாப்பான் படித்துறையில் இருந்து பால்குடம் எடுத்து வந்துள்ளார். அப்போது எதிரி அஜித்குமார் புகார்தாரரின் பக்கத்தில் வந்து ஆடிக்கொண்டும் புகார்தாரரை வேண்டுமென்றே இடித்துக்கொண்டும் வந்துள்ளார். அதற்கு அவர் எதிரியிடம் ஏன்பா இப்படி இடிக்கிற என்று கேட்டதற்கு எதிரி அவரைப் பார்த்து டேய் புண்டாமவனே நீ என்ன ஊர்ல ஆளுப்புண்டையா என்று தகாத வார்த்தையால் திட்டியுள்ளார். அதற்கு புகார்தாரர் எதிரியிடம் தம்பி நான் உன்னை விட வயதில் மூத்தவன் ஏன் என்னை மரியாதை இல்லாமல் பேசுற என்று கூறியுள்ளார். அதற்கு எதிரி புகார்தாரரை கையால் முகம் மற்றும் உடம்பில் மாறி மாறி அடித்து புகார்தாரரின் சட்டையை கிழித்துள்ளார். பிறகு மீண்டும் எதிரி புகார்தாரரை பார்த்து ஒழுங்கா இருந்துக்கோடா இல்லைன்னா நீ உயிரோட இருக்கமாட்ட என்று மிரட்டியுள்ளார். எனவே எதிரி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(பி), 323 மற்றும் 506 Part I ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக ஜீயபுரம் காவல் உதவி ஆய்வாளர் அவர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

### 2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது :

குற்ற இறுதி அறிக்கை மற்றும் இதர வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றத்தின் சாராம்சம் குறித்து எடுத்துரைத்தல் :**

எதிரிக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இருதரப்பும் கேட்கப்பட்டு தகுந்த ஆதாரங்கள் மற்றும் நம்புவதற்கு காரணங்கள் இருப்பதனால் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b) மற்றும் 323 ன் கீழான குற்றங்களின் சாராம்சம் குறித்து குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 251ன் கீழ் எதிரிக்கு எடுத்துரைத்து வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், அவர் குற்றவாளி இல்லை என்றும் தெரிவித்தார். எனவே இந்த வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள் :**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் அவர்கள் மூலம் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பில் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப் படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

i) அ.சா.1 திரு.மாதேஸ்வரன் அந்தநல்லூர் நான்காவது வார்டில் வசித்து வரும் விவசாயி ஆவார். அ.சா.1 மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு சென்றபோது ஜீயபுரம் போலிசார் அவரிடம் வெற்றுத்தாளில் அ.சா.ஆ.1 கையொப்பம் வாங்கிக்கொண்டுள்ளார்கள். அ.சா.2 தங்கமணி மாதேஸ்வரனின் மனைவி ஆவார். அ.சா.3 தனராஜா மாதேஸ்வரனின் அண்ணன் ஆவார். அ.சா.1 முதல் அ.சா.3 அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

ii) கடந்த மே 31, 2021 அன்று மதியம் 02.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்கள் ஜீயபுரம் காவல் நிலைய பொறுப்பில் இருந்து வந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகாரை பெற்று நிலைய குற்ற எண்.152/2022 இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506 Part I ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதன் அடிப்படையில் உதவி ஆய்வாளர் அன்றையதினமே மதியம் 03.00 மணிக்கு சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி 5 நிரஞ்சுகுமார் மற்றும் பட்டியல் சாட்சி 6 சங்கர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பிறகு சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். அதன் பிறகு ஜூலை 09, 2022 அன்று எதிரியானவர் மாண்புமிகு திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சென்றுவிட்டதால் அவர் மீது உதவி ஆய்வாளர் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இறுதியாக காவல் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணை முடித்துக்கொண்டு எதிரி மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294 (b), 323 மற்றும் 506 Part I ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>6. குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1)(ஆ)ன் கீழான விசாரணை :–</u>**

அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் விசாரணையிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துவிட்டார். மேலும் அவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பு சாட்சியமானது முடித்துவைக்கப்பட்டது.

**7. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.**

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில் : –**

i) அரசு தரப்பில் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழான உட்கூறுகள் தகுந்த சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

ii) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**9. பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள் :**

இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனைகள் இரண்டுமே ஒன்றுக் கொன்று பிணைந்திருப்பதால் இரு பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

i) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பையே சார்ந்ததாகும். அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். தற்போது தீர்மானிக்கவேண்டிய பிரச்சனைகள் யாதெனில், **அரசு தரப்பில் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழான குற்றங்களின் உட்கூறுகள் தகுந்த சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? மற்றும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**ii) இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(b) ன் கீழ் உள்ள உட்கூறுகள் யாதெனில் :**

அ) எதிரி ஆபாச சொற்களை மொழிதல்.

ஆ) மேற்படி ஆபாச சொற்கள் பொது இடத்தில் மொழிதல் வேண்டும்.

இ) மேற்படி ஆபாச சொற்களை மொழிதல் மற்றவர்களுக்கு தொந்தரவாக இருக்கவேண்டும்.

**iii) இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 323ன் கீழான உட்கூறுகள் யாதெனில் :–**

அ) எதிரி ஒருவருக்கு காயம் விளைவித்தல் வேண்டும்.

ஆ) மேற்படி காயத்தை அவர் தன்னிச்சையாக விளைவித்தல் வேண்டும்

இ) எதிரியின் செயல் பிரிவு 334ன் படி ஆத்திரமூட்டப்பட்டதன் பேரில் விளைவித்தல் கூடாது.

iv) அ.சா.1 திரு.மாதேஷ்வரன் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவரின் சாட்சியத்தினை முழுமையாக பரிசீலனை செய்ததில் அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாகி உள்ளது தெரிய வருகிறது. அவர் இவ்வழக்கின் ஆணிவேரான புகாரையே மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றும் மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு சென்றபோது ஜீயபுரம் போலீசார் அவரிடம் வெற்றுத்தாளில் அவரது அ.சா.ஆ.1 கையொப்பம் பெற்றுக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் வெற்றுத்தாளில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளதால் இந்த வழக்கில் அ.சா.1 அளித்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.2 புகாரின் நம்பகத்தன்மை குறித்து நியாயமான சந்தேகங்கள் எழுகின்றது.

v) மேலும் அ.சா.1 எதிரி குறித்தும் அவரின் குற்றமுறு செய்கை குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. அ.சா.1 இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 294(b), மற்றும் 323ன் கீழான எந்தவொரு உட்கூறு குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, அவரது சாட்சியமானது நம்பத்தகுந்ததாக இல்லை. மேலும் அவரது சாட்சியமானது எதிரிக்கு எதிரான அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை.

vi) அ.சா.2 தங்கமணி மற்றும் அ.சா.3 தனராஜா இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். அவர்கள் இருவரின் சாட்சியங்களை முழுமையாக பரிசீலனை செய்ததில் அவர்கள் இருவரும் எதிரியை தெரியாது என்றும், வழக்கு விவரம் குறித்து எதுவும் தெரியாது என்றும், போலிசார் விசாரணை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாகியுள்ளது தெரிய வருகிறது. கண்ணுற்ற சாட்சிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த எதிரியை அடையாளம் காணவில்லை. அவர்கள் இருவரும் இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b) மற்றும் 323ன் கீழான எந்தவொரு உட்கூறு குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, அவர்களது சாட்சியமும் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை.

vii) இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் இருவரும் எதிரி மீதான குற்றங்கள் குறித்து உறுதிபட மெய்ப்பித்து சாட்சியம் எதுவும் அளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் மீதமுள்ள மூன்று பட்டியல் சாட்சிகளை விசாரிக்காமல் நிறுத்தம் செய்து மேற்குறிப்பு செய்துள்ளார். மேலும் அரசு தரப்பில் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஜீயபுரம் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.ஃபிரீடா ஜெபக்குமாரி அவர்கள் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் புலன் விசாரணை அதிகாரி திரு.செல்வராஜ் அவர்கள் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்தும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது குறித்தும் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

viii) ஆனால் மேற்படி அவரது சாட்சியத்தினை ஒத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கின் புகார்தாரரே புகார் எதுவும் அளிக்கவில்லை என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சி ஆகிவிட்டார். விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளும் எதிரிக்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

ix) மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த **Saraswathi And Another Vs State 2002 Cri LJ 1420** என்ற தீர்ப்பில் **"இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(b)ன் கீழான குற்றத்தின் உட்கூறுகள் ஆபாச சொற்களை ஒரு நபர் பொது இடத்தில் மற்றவருக்கு எரிச்சல் ஊட்டும் வகையில் மொழிதல் வேண்டும்"** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய அரசு தரப்பு வழக்கில் மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவு 294(b) ன் கீழான எந்தவொரு உட்கூறும் அரசு தரப்பு சாட்சியத்தின் மூலமாக நிலைநாட்டப்படவில்லை. மேலும் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 323 ன் கீழான எந்த ஒரு உட்கூறும் அரசு தரப்பில் நிலைநாட்டப்படவில்லை. எனவே எதிரிக்கு எதிரான குற்றங்களை நிலைநாட்ட அரசு தரப்பு தவறிவிட்டது.

**x) ஆகையால் எதிரிக்கு எதிரான குற்றங்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.** முடிவாக எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b) மற்றும் 323 ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1) ன் கீழ் அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

xi) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஓம்.K.R.பாலாஜி
நீதித்துறை நடுவர் எண்.3,
திருச்சிராப்பள்ளி.

<u>அரசு தரப்பு சாட்சிகள் –</u>

அ.சா.1 – மாதேஷ்வரன்
அ.சா.2 – தங்கமணி
அ.சா.3 – தனராஜா
அ.சா.4 – திருமதி.ஃப்ரீடா ஜெபக்குமாரி (காவல் உதவி ஆய்வாளர்)

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் –</u>

அ.சா.ஆ.1 – புகாரில் உள்ள கையொப்பம்
அ.சா.ஆ.2 – புகார்
அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்
அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றுப்பொருட்கள்–</u> இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –</u> இல்லை

ஓம்.K.R.பாலாஜி
நீதித்துறை நடுவர் எண்.3
திருச்சிராப்பள்ளி.

<u>குறிப்பு –</u>

1. தீர்ப்பின் நகல் அரசு தரப்பினருக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் சென்றுள்ளார்.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர் எண்.3
திருச்சிராப்பள்ளி.